முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.09.2022**, வியாழக்கிழமை

1. தவமோடு தரும ஞான பலத்தை
   தரணியில் உள்ளவர்கள் அடையவே
   அவதாரம் புரிந்து அருளாசி தரும்
   அரங்கமகான் அனுகூலம் பெற்ற மக்கட்கு
2. மக்கட்கு மரணமிடர் இல்லையெனக் கூறி
   மார்க்கமுடன் சுபகிருது தரிவை திங்கள்
   தக்கதொரு பஞ்ச திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 05 ம் நாள், 22.09.2022 வியாழக்கிழமை)
   தாமுரைப்பேன் அத்திரி மகரிஷியும்
3. மகரிஷியும் அனுகூல ஆசிதனை
   மக்களெல்லாம் பயனுற வேண்டி
   செகமெங்கும் ஞானிகள் வெளிப்பாடு
   சித்திகளாக நிகழ இருக்க
4. இருக்கவே கலிவேகம் தானும்
   எல்லை கடந்து மக்களை வாட்டி
   வருத்தினாலும் மறுபுறம் ஞானிகள்
   வல்லமையான வழிகாட்டல் நடந்துவர
5. வருங்காலம் ஞானசித்தர்களின்
   வல்லமையான பிடிக்குள் வந்து
   வருங்காலம் ஞானசித்தர் ஆட்சிகாலமாக
   வடிவம் பெற்று சடுதி மாற்றம்
6. மாற்றம் மக்களை நோக்கி
   மகான் அரங்கன் அவதாரத்தால்
   ஆற்றல்பட நிறைவேறி வர
   அகிலத்தார் அரங்கன் குடிலை
7. குடிலை அனுகி வந்து இனிதே
   குருவடி பற்றி தீட்சை ஏற்று
   தேடியே அன்னதான சேவையை
   தேசிகன் காட்டும் அறமாகச் செய்து
8. செய்துமே உலகோர் தொடர
   சித்திகள் அவரவர் தனக்குமே
   அய்யமற ஆறுமுகன் ஆசியாக
   அரங்கன் வழி அனுகூலமாகி
9. ஆகியே கலி இடர்களை வெல்வர்
   ஆபத்து இயற்கை பேரிடர்
   வகையிலா வஞ்ச அல்லலை
   வக்கிர கொடூரங்களையும் வென்று

10. வென்று பாதுகாப்புப் பெறுவர்
வேலவன் வழிபாடு பெருகி
நன்றான சமூகச் சூழல் ஆகி
ஞானிகள் கோடான கோடியர்களாக

11. ஆகவே உருவாகி மாற்றத்தை
ஆளுமைதனிலும் படைத்து
செகத்தினில் ஞான ஆட்சித்தருவர்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–